# மனைத்தலைவிக்கு வாழ்த்து

வாழ்க மனைவியாம் கவிதைத் தலைவி!
தினமுமிவ் வுலகில் சிதறியே நிகழும்
பலபல பொருளிலாப் பாழ்படு செய்தியை,
வாழ்க்கைப் பாலையில் வளர்பல முட்கள்போல்
பேதை யுலகைப் பேதைமைப் படுத்தும்
வெறுங்கதைத் திரளை, வெள்ளறிவுடைய
மாயா சக்தியின் மகளே, மனைக்கண்
வாழ்வினை வகுப்பாய், வருடம் பலவினும்
ஓர்நாட் போல மற் றோர்நாள் தோன்றாது
பலவித வண்ணம் வீட்டிடைப் பரவ
நடத்திடும் சக்தி நிலையமே, நன்மனைத்
தலைவீ! ஆங்கத் தனிப்பதர்ச் செய்திகள்
அனைத்தையும் பயனிறை அனுபவ மாக்கி
உயிரிலாச் செய்திகட் குயிர்மிகக் கொடுத்து
ஒளியிலாச் செய்திகட் கொளியருள் புரிந்து
வான சாத்திரம் மகமது வீழ்ச்சி
சின்னப் பையல் சேவகத் திறமை
எனவரு நிகழ்ச்சி யாவே ஆயினும்
அனைத்தையு மாங்கே அழகுறச் செய்து
இலௌகிக வாழ்க்கையிற் பொருளினை இணைக்கும்
பேதைமா சக்தியின் பெண்ணே வாழ்க!
காளியின் குமாரி அறங் காத்திடுக!
வாழ்க! மனையகத் தலைவி வாழ்க!

*Excerpts from C. Subramania Bharati's Poems, edited by Dr. S. Vijaya Bharati.*

## செல்லம்மா பாட்டு (1)

ராகம்: செஞ்சுருட்டி   தாளம்: ரூபகம்

பல்லவி

எங்கள் செல்லம்மா நகை புதுரோஜாப்பூ
எங்கள் செல்லம்மா விழி இந்த்ரநீலப்பூ
எங்கள் செல்லம்மா முகம் செந்தாமரைப்பூ
எங்கள் செல்லம்மா நுதல் பாலஸூர்யன்.

சரணங்கள்

1. எங்கள் செல்லம்மா எழில் மின்னலை நேர்க்கும்
எங்கள் செல்லம்மா புருவங்கள் மதன் விற்கள்
திங்களை மூடிய பாம்பினைப் போலே
செறிகுழல் இவள் நாசி எட்பூ.
(எங்கள்)

2. மங்கள வாக்கு நித்யானந்த ஊற்று
மதுரவாய் அமிர்தம் இதழமிர்தம்
ஸங்கீத மென்குரல் ஸரஸ்வதி வீணை
சாயல் அரம்பை சதுர் அமிராணி.
(எங்கள்)

3. இங்கித நாத நிலைய மிருசெவி
சங்கு நிகர்த்த கண்டம் அமிர்த சங்கம்
மங்களக் கைகள் மஹாசக்தி வாஸம்
வயிறாலிலை இடை அமிர்த வீடு. (எங்கள்)

4. சங்கரனைத் தாங்கு நந்தி பதசதுரம்
தாமரை யிருதாள் லக்ஷ்மீ பீடம்
பொங்கித் ததும்பித் திசையெங்கும் பாயும்
புத்தன்பும் ஞானமும் மெய்த்திருக் கோலம்.
(எங்கள்)

# செல்லம்மா பாட்டு (2)

பல்லவி

நின்னையே ரதியென்று
நினைக்கிறேனடி — செல்லம்மா
தன்னையே சசியென்று
சரண மெய்தினேன். (நின்னையே)

சரணங்கள்

1. பொன்னையே நிகர்த்த மேனி
மின்னையே நிகர்த்த சாயல்
பின்னையே — நித்ய
கன்னியே — செல்லம்மா. (நின்னையே)

2. மார னம்புகள் என்மீது
வாரி வாரி வீச நீ கண்
பாராயோ — வந்து
சேராயோ — செல்லம்மா. (நின்னையே)

3. யாவுமே சுகமுனிக்கொர்
ஈசனாம் எனக்குன் தோற்றம்
மேவுமே இங்கி-
யாவுமே — செல்லம்மா. (நின்னையே)

*Excerpts from C. Subramania Bharati's Poems, edited by Dr. S. Vijaya Bharati.*

## செல்லம்மா பாட்டு (3)

பல்லவி

பீடத்தில் ஏறிக்கொண்டாள் — மனப்
பீடத்தில் ஏறிக்கொண்டாள்.

சரணங்கள்

1. நாடித் தவம் புரிந்து — பீடுற்ற முனிவரர்
கேடற்ற தென்று கண்டு — கூடக் கருதுமொளி
மாடத்தி லேறி ஞானக் — கூடத்தில் விளையாடி

ஓடத் திரிந்து கன்னி — வேடத் திரதியைப்போல்
ஈடற்ற கற்பனைகள் — காடுற்ற சிந்தனைகள்
மூடிக் கிடக்கு நெஞ்சின் — ஊடுற்றதை யமரர்

தேடித் தவிக்கு மின்ப — வீடொத் தினிமைசெய்து
வேடத்தி சிறுவள்ளி — வித்தையென் செல்லம்மா.

(பீடத்தில்)

2. கண்ணன் திருமார்பில் — கலந்த கமலையென்கோ?
விண்ணவர் தொழுதிடும் — வீர சிங்காதனத்தே

நண்ணிச் சிவனுடலை — நாடு மவளென்கோ?
எண்ணத் திதிக்குதடா — இவள்பொன் னுடலமுதம்
பெண்ணி லரசியிவள் — பெரிய எழிலுடையாள்
கண்ணுள் மணியெனக்குக் — காத லிரதியவள்

பண்ணி லினியசுவை — பரந்த மொழியினாள்
உண்ணும் இதழமுத — ஊற்றினள் செல்லம்மா.

(பீடத்தில்)